7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

271. பனங்கற்கண்டைப் பொறுத்தவரையில், திருநெல்வேலி மாவட்டத்தை அறிவிக்கப்பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 1980ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28ஆம் தேதியிடப்பெற்ற 1454ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

272. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் ஆறாம் ஆண்டறிக்கையும் கணக்குகளும் 1979-80 (தமிழ்). [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

187. தமிழ்நாடு காவல் துறை குறித்த ஆய்வுரை, 1980-81. (தமிழ், ஆங்கிலம்).

188. தமிழ்நாடு தீயணைப்புத் துறை குறித்த ஆய்வுரை, 1980-81. (தமிழ், ஆங்கிலம்).

189. 'தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, லிமிடெட்'—வங்கியின் வளர்ச்சி பற்றிய சிறு குறிப்பு—1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

190. 'தமிழ் நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்' பற்றிய குறிப்பு, 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

191. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு—1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளில் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

192. 'தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

193. 'டான்பெட்—தமிழக உழவர்களுக்கு ஒரு கூட்டுறவு நிறுவனம்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

194. 'தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மீதான அறிக்கை' குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1980-81.